மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 113, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

113—

நியாய விலைக் கடையைப் பிரித்தல்

***36154—திருமதி ம. வரலட்சுமி:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதி, காரணைபுதுச்சேரி ஊராட்சியில் உள்ள முழுநேர நியாய விலைக் கடையை (03DP048PY) *இரண்டாகப் பிரிக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், காட்டாங்குளத்தூர் ஒன்றியம், காஞ்சிபுரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின் கட்டுப்பாட்டில் காரணைபுதுச்சேரி முழுநேர நியாய விலைக் கடை 1,629 குடும்ப அட்டைகளுடன் அரசுக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், காரணைபுதுச்சேரி முழுநேர நியாய விலைக் கடையைப் பிரித்து, மற்றொரு முழுநேர நியாய விலைக் கடையைத் தொடங்குவது குறித்து கேட்டிருக்கிறார். துறை ரீதியாகப் பரிசீலித்து நடவடிக்கை எடுப்பது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, இதுகுறித்து ஆராயப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி, இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 114, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.